ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை – 2009 – 10ம் ஆண்டு மானியக் கோரிக்கை எண். 42ன் மீதான விவாதத்தின் போது மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்களின் அறிவிப்பு – ஊராட்சிகளிலுள்ள ஊராட்சி உதவியாளர்கள் நிலை–2 பணியிடங்களை நிலை உயர்த்தி, அனைத்துப் பணியிடங்களையும் ரூ.2500–5000 என்ற ஊதிய விகிதத்தில் ரூ.500/– தர ஊதியத்துடன் (Grade Pay) ஊராட்சி உதவியாளர் பணியிடங்களாக அறிவித்து ஆணை வெளியிடப்படுகிறது.

---

**ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி (இ5) துறை**

**அரசாணை (நிலை) எண்.91** **நாள் 12.08.2009**

படிக்கப்பட்டது.

1. அரசாணை நிலை எண்.175, ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி (இ5) துறை, நாள் 5.12.06.
2. ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி ஆணையரின் கடித எண். 47247/09/இ3, நாள் 15.7.09.

**ஆணை:**

29.06.2009 அன்று நடைபெற்ற ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறையின் மானியக் கோரிக்கை எண்.42ன் மீதான விவாதத்தின் போது பதிலளித்த மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்களால் அறிவிப்பு எண். 24–ல் கீழ்க்கண்டவாறு அறிவிப்பு வெளியிடப்பட்டது.

“தமிழக அரசு, சமீபத்தில் அறிவித்த ஊதிய சீரமைப்பிற்குபின், ஊராட்சிகளில் பணியாற்றும் ஊராட்சி உதவியாளர்கள் நிலை–1 மற்றும் நிலை–2 ஆகியோருக்கான வெவ்வேறு ஊதிய விகிதங்கள் அளிக்கப்பட்டுள்ளன. ஊராட்சி உதவியாளர்கள் நிலை–1 மற்றும் நிலை–2 ஆகியோர் ஒரே வகையான பணிகளை செய்துவரும் நிலையில் ஊராட்சிகளிலுள்ள ஊராட்சி உதவியாளர்களின் நிலை–2 பணியிடங்களை நிலை உயர்த்தி, அனைத்துப் பணியிடங்களையும் 2500–5000 என்ற ஊதிய விகிதத்தில் ரூ.500 தர ஊதியத்துடன் (Grade pay) ஊராட்சி உதவியாளர் பணியிடங்களாக அறிவிக்கப்படுகிறது. இதனால் ஊராட்சி உதவியாளர்களின் நிலை–2ல் உள்ள சுமார் 11,000 பேர் பயன்பெறுவார்கள்.”

2. தமிழ்நாட்டிலுள்ள 12,618 கிராம ஊராட்சிகளில் 1.9.2006 தேதிக்கு முன்னர் முழுநேர ஊராட்சி உதவியாளர்கள் மற்றும் பகுதிநேர ஊராட்சி எழுத்தர்கள் என இருவகையான பணியாளர்கள் பணிபுரிந்து வந்தனர். 5.12.2006 நாளிட்ட ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை அரசாணை (நிலை) எண். 175–ன்படி இவர்களது பதவியின் பெயர்கள் மாற்றி அமைக்கப்பட்டு இவர்கள் பெற்று வந்த தொகுப்பூதியத்திற்கு பதிலாக கீழ்க்கண்டவாறு 1.9.2006 முதல் காலமுறை ஊதியம் அளித்து ஆணை வெளியிடப்பட்டது.

அ) முழுநேர ஊராட்சி உதவியாளர்கள், ஊராட்சி உதவியாளர்கள் நிலை–1 என்று அழைக்கப்பட்டு, அவர்களின் ஊதியம் 1.9.2006 முதல் ரூ.1300–20–1500–25–2000 என்ற காலமுறை ஊதியத்தில் நிர்ணயம் செய்யப்பட்டது.

ஆ) பகுதிநேர எழுத்தர்கள் முழுநேர ஊராட்சி உதவியாளர்களாக ஆக்கப்பட்டு, ஊராட்சி உதவியாளர் நிலை–2 என்று பெயரிடப்பட்டு அவர்களின் ஊதியம் 1.9.2006 முதல் ரூ.625–10–725–20–925 என்ற காலமுறை ஊதியத்தில் நிர்ணயம் செய்யப்பட்டது.

3. தமிழ்நாட்டில் தற்பொழுது ஒவ்வொரு கிராம ஊராட்சியிலும் ஒரு ஊராட்சி உதவியாளர் பணியிடம் மட்டுமே (ஊராட்சி உதவியாளர் நிலை–1 அல்லது நிலை–2) உள்ளது. ஊராட்சி உதவியாளர் நிலை–1 மற்றும் ஊராட்சி உதவியாளர் நிலை–2 ஆகிய இரு பிரிவு பணியாளர்களும், ஊராட்சிகளின் வரி கேட்பு தயார் செய்து வசூல் செய்தல், ரொக்கப் புத்தகம் உள்ளிட்ட வருவாய் மற்றும் செலவினம் தொடர்புடைய 1 முதல் 31 பதிவேடுகளை பராமரித்தல் ஊராட்சிகளின் மாதாந்திர கூட்டம், கிராம சபைக் கூட்டம் நடத்திட ஏற்பாடு செய்வது, குடிநீர் வழங்குதல்,

தெருவிளக்கு பராமரித்தல், சாலை பராமரிப்பு, மத்திய மற்றும் மாநில திட்டங்களை செயல்படுத்துதல் மற்றும் தேசிய ஊரக வேலை உறுதித் திட்டத்தின் கீழ் தினசரி பணியாளர் வருகைப் பதிவேட்டை பராமரித்தல் போன்ற ஒரே விதமான பணிகளையே மேற்கொள்கின்றனர். எனினும் ஊதிய சீரமைப்பிற்கான அலுவல் குழு (Official Committee on Revision of Scale of Pay and Allowances etc.,) அளித்துள்ள பரிந்துரையின் அடிப்படையில் பணியாளர்களுக்கு புதிய ஊதிய விகிதம் அளித்து ஆணையிடப்பட்ட 1.6.09 நாளிட்ட நிதித்துறையின் அரசாணை (நிலை) எண். 234ல் ஊராட்சி உதவியாளர்களுக்கு கீழ்க்கண்டவாறு ஊதிய விகித மாற்றம் 1.9.2006 முதல் கருத்தியலாகவும், 1.1.2007 முதல் பணப்பயன்களுடன் அனுமதிக்கப்பட்டுள்ளது.

அ) ஊராட்சி உதவியாளர் நிலை–1 :- ரூ.2500–5000 மற்றும் தர ஊதியம் ரூ.500/–
ஆ) ஊராட்சி உதவியாளர் நிலை–2:- ரூ.1300–3000 மற்றும் தர ஊதியம் ரூ.300/–

4. ஊராட்சிகளில் பணிபுரியும் ஊராட்சி உதவியாளர் நிலை–1 மற்றும் நிலை–2 ஆகிய இரு பிரிவு பணியாளர்களும் ஊராட்சிகளில் ஒரே விதமான பணிகளை மேற்கொள்வதால் மாண்புமிகு துணை முதலமைச்சரின் அறிவிப்பிற்கிணங்க ஊராட்சிகளிலுள்ள ஊராட்சி உதவியாளர்களின் நிலை–2 பணியிடங்களை நிலை உயர்த்தி, அனைத்து பணியிடங்களையும் ரூ.2500–5000 என்ற ஊதிய விகிதத்தில் ரூ.500/– தர ஊதியத்துடன் ஊராட்சி உதவியாளர் பணியிடங்களாக மாற்றுவதற்குரிய கருத்துருவை ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி ஆணையர் அனுப்பியுள்ளார்.

5. ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி ஆணையரின் கருத்துருவை ஏற்று, ஊராட்சிகளிலுள்ள ஊராட்சி உதவியாளர் நிலை–2 பணியிடங்களை ரூ.2500–5000 என்ற ஊதிய விகிதத்தில் ரூ.500/– தர ஊதியத்துடன் நிலை உயர்த்தியும் மேலும், ஊராட்சி உதவியாளர் நிலை–1 மற்றும் நிலை–2 ஆகிய அனைத்து பணியிடங்களும் இனிமேல் ஊராட்சி உதவியாளர் பணியிடங்கள் என அழைக்கப்படும் எனவும் அரசு ஆணையிடுகிறது. இவ்வாணை, ஆணை வெளியிடப்படும் நாள் முதல் நடைமுறைக்கு வரும்.

6. இதனால் ஏற்படும் செலவினம் சம்பந்தப்பட்ட கிராம ஊராட்சி நிதியிலிருந்து மேற்கொள்ளப்பட வேண்டும்.

7. இவ்வாணை நிதித் துறையின் அ.சா.எண்.44887/C.M.P.C, நாள் 4.8.09 பெறப்பட்ட இசைவுடன் வெளியிடப்படுகிறது.

(ஆளுநரின் ஆணைப்படி)

**நிரஞ்சன் மார்டி,**
அரசுச் செயலாளர்(பொறுப்பு)